**அரியலூர் மாவட்டம் பத்தாம் வகுப்பு முதல் திருப்புதல் தேர்வு - தமிழ் 2ம் தாள் வினாத்தாள்**

# முதல் திருப்புதல் தேர்வு 2016 - 17

## தமிழ் இரண்டாம் தாள்

வகுப்பு 10

மதிப்பெண்கள் 100
காலம் :2.30 மணி

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

குறிப்பு: வினா எண் 36 க்கான படிவம் விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது அதனைப்பூர்த்தி செய்யவும்.

### பிரிவு-I (மதிப்பெண்கள்:20)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5x1=5

### பகுதி-1

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மொழி முதல் இடை கடை ஆகிய மூவிடங்களிலும் குறுகும் குறுக்கம்........... குறுக்கமாகும். அ) ஐகாரம் ஆ) ஔகாரம் இ) மகரம் ஈ) ஆய்தம்
2. மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது ............ குறிக்கும்
அ) பசு ஆ) காளை இ) கன்று
3. கருமை + குழி என்பது ............ எனும் விதிகளின்படி புணரும்.
அ) ஆதிநீடல், இனமிகல் ஆ) தன்னொற்றிரட்டல், இடையுகரம் இ) ஆதல்
ஈ) ஈறுபோதல், இனமிகல்
4. மார்கழி, தை ஆகிய இரண்டும் ............ காலத்திற்குரியன.
அ) முன்பனி ஆ) பின்பனி இ) இளவேனில்.
5. கயிறு-இச்சொல்லை அலகிட்டால் ............ எனப்பிரியும்
அ) நேர்நேர் ஆ) நிரைநேர் இ) நிரைநிரை.

### பகுதி-2

கோடிட்ட இடத்தை நிரப்புக. 5x1=5

6. தொழிலைக் குறிக்கும் சொல் .................
7. 'இது செய்வாயா' என்னும் வினாவிற்கு 'வயிறு வலிக்கும்' எனக் கூறுவது ........ விடை
8. வேய் ................ தோள்
9. கடலும் கடல்சார்ந்த இடமும் ............... திணையாகும்.
10. பின்வருநிலையணி ................. வகைப்படும்.

### பகுதி-3

சுருக்கமான விடையளிக்க. 10x1=10

11. முதலெழுத்துகள் எத்தனை?
12. வருக வருக-இலக்கணக்குறிப்பு தருக?
13. மாலா நன்னூல் கற்றாள்- இத்தொடரை பிறவினையாக்குக.

கல்வி அமுது http://kalviamuthu.blogspot.com கல்வி அமுது



14. ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்றுத் தந்தார்.
(சந்திப்பிழை நீக்கி எழுதுக)
15. தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.
(ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக)
16. வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக: வெண்ணீர் கொண்டு வா
17. பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.
இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்.
18. நிறுத்தக் குறியிட்டு எழுதுக.
தமிழர்கள் நிலத்தை செம்மண் களர்நிலம் உவர்நிலம் எனவும் பகுத்துள்ளனர்.
19. உவமையைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக. (கீரியும் பாம்பும் போல)
20. தொகைச் சொல்லை விரித்தெழுதுக: (ஐம்பொறி)

## பிரிவு-II (மதிப்பெண்கள்:10)

5×2=10

ஏதேனும் ஐந்து வினாவிற்கு விடையளி.

21. பகுபத உறுப்பிலக்கணம் தருக: கட்டினான்
22. தெரிநிலை வினைமுற்றைச் சான்றுடன் விளக்குக.
23. ஒன்றொழிப் பொதுச் சொல் என்றால் என்ன?
24. அறிவினா, அறியாவினாவை விளக்குக.
25. உவம உருபுகள் யாவை?
26. குறிஞ்சித் திணைக்குரிய முதல் கரு பொருள்கள் யாவை?
27. வெட்சித் திணையை விளக்குக.

## பிரிவு-III (மதிப்பெண்கள்:50)

### பகுதி-1

2×5=10

ஏதேனும் இரண்டுக்கு விடையளி.

28. இணைக்குறள் ஆசிரியப் பாவை விளக்குக.
29. தற்குறிப்பு ஏற்றணி (அல்லது) பிறிது மொழிதல் அணி-விளக்குக.
30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்"

### பகுதி-2

ஏதேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க.

31. அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் சட்டங்கள். 2×5=10
32. குறட்டை ஒலி கதையில் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்கி எழுதுக.
33. அயோத்திதாசர் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டு குறித்துக் கட்டுரை எழுதுக.

## பகுதி-3

34. கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க 3+2=5

அ) சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்டா வர்றே? வழியிலே ஒரே ட்ராபிக் ஜாம்பா. அதனாலதான் லேட்.

ஆ) கீழ்க்காணும் அரபு எண்களைத் தமிழ் எண்களாக மாற்றி எழுதுக.

423 516 240 679

35. கீழ்க்காணும் ஆங்கில உரைப் பகுதியைத் தமிழாக்கம் செய்க 3+2=5

அ. school do not stop with teaching the children the leassons alone. They do more. It is in the schools that the boys and girls form some regular habits. The learn to behave in an orderly way- Thay are corrected whenever they go wrong

ஆ. ஆங்கிலப் பழமொழிகளில் ஏதேனும் இரண்டுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

1. Manners make the man
2. Live and let live
3. Look before you leap
4. covet all lose all.

## பகுதி-4

36. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க 1x5=5

அமுதா அன்று காலையில் தன் அம்மாவிற்கு உதவிகளை செய்துவிட்டு, பள்ளிப்பையை எடுத்துக் கொண்டு பள்ளிக்குச் செல்கையில் திடீரென்று.........

(அல்லது) ஆ) இயற்கை அல்லது நட்பு

## பகுதி-5

37. கீழ்க்காணும் பாடலின் திரண்டக் கருத்தை எழுதி. அப்பாடலில் அமைந்துள்ள ஏதேனும் ஐந்து நயங்களை எடுத்தெழுதுக 1x5=5

நாடும் மொழியும் நமதிரு கண்கள்
நாம்தினம் போற்றி வணங்கிடுவோமே
கூடும் அன்பினில் வேற்றுமை மறந்தே
குலவிடுவோமே இந்தியர் என்றே
தேடிய சுதந்தரப் பயிரின் வேலி
தூயநல் ஒருமைப் பாடே ஆகும்.
ஓடும் வேற்றுமை நோயே உரிய
ஒருமைப்பாடெனும் மாமருந்தாலே.

[illegible]

38. கீழுள்ள படிவத்தை நிரப்புக. 1×5=5

வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் படிவம் நிரப்புக.

பகுதி-6

39. கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து, பின்வரும் வினாவிற்கு விடையெழுதுக. 3+2=5

அ) மதியழகன் பத்தாம் வகுப்பில் படித்து வருகிறான். மேற்கொண்டு திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறான். வீட்டில் அவன் பெற்றோரோடு ஒரு நாள் பேசிக் கொண்டிருக்கும் போது தன் எண்ணத்தை வெளியிடுகிறான். அதைக் கேட்டதும், தந்தை அவன் மீது சினம் கொள்கிறார். ஏனெனில் அவன் மிகச் சிறந்த பொறியாளராக வரவேண்டும் என்பது அவருடைய விருப்பம். மதியழகன், தந்தையிடம் எப்படிச் சொல்லிப் புரியவைப்பது என்று தடுமாறுகிறான்.

1. மதியழகன் படிக்க விரும்புவது எக்கல்வி?
2. மதியழகன் தந்தை விரும்பும் கல்வி எது?
3. மதியழகன் தன் பெற்றோரை எவ்வாறு சம்மதிக்க வைப்பான்?

ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையெழுதுக.

பூங்குழலி மட்டும் வீட்டில் தனியாகப் படித்துக் கொண்டிருக்கிறாள்.

பூங்குழலியின் தந்தையைத் தேடி ஒருவர் வீட்டுக்கு வருகிறார் தந்தை வெளியூர் சென்றிருக்கிறார் என்று பூங்குழலி கூறினாலும் அவர் அதனைக் கேட்காமல் அவளிடம் பேசிக் கொண்டே இருக்கிறார்.

1. அந்தச் சூழ்நிலையைப் பூங்குழலி எவ்வாறு எதிர் கொள்வாள்?
2. நீங்கள் பூங்குழலியாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

## பிரிவு- IV (மதிப்பெண்கள்: 20)

### பகுதி-1

40. கீழ்க்காணும் கடிதங்களில் ஒன்றிற்கு விடையளி. 1×10=10

1. சுற்றுலாவுக்குச் செல்ல இசைவு வேண்டி விண்ணப்பம்
2. உன் ஊருக்கு சாலை வசதி வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு ஒரு விண்ணப்பம்.

### பகுதி-2

41. கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு விரிவான கட்டுரை எழுதுக. 1×10=10

1. நீரின்றி இயங்காது உலகம் - நீர் நிலைகள் அடிப்படை நீர்ப்பற்றாக்குறை ஏற்படக் காரணம் - நீரைச் சேமிக்கும் வழிகள் - மழைநீரைச் சேமித்தல் - நிலத்தடிநீரைச் சேமித்தல் வழிமுறைகள் - மரம் வளர்ப்போம் - மழை பெறுவோம்.
2. கணினியின் தோற்றம் - வளர்ச்சி - பயன்பாடு- முடிவுரை -